# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,135 — 1960 මැයි 24 වැනි අඟහරුවාද — 24.5.1960

12,135 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

1949 ம் ஆண்டின் 48 ம் இலக்க இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) திருத்தச் சட்டத்தின் 6 ம் பிரிவால் திருத்தப்பட்டதற்கிணங்க 1946 ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளையின் 9 (1) ம் பிரிவால் என் மீது பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, உள்நாட்டலுவல், கிராமாபிவிருத்தி அமைச்சராகிய, மொகமட் காசிம் மொகமட் கலீல் ஆகிய நான், இத்துடனிருக்கும் அட்டவணையின் I ம் நிரலில் காட்டப்பட்டுள்ள தேர்தற் றொகுதிகளுக்கு II ம் நிரலில் கூறப்பட்டுள்ள உதவிப் பதிவு உத்தியோகத்தரை இத்தால் நியமிக்கின்றேன்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு மே மாதம் 23 ந் தேதி.

எம். சி. எம். கலீல்,
உள்நாட்டலுவல், கிராமாபிவிருத்தி
அமைச்சர்.

அட்டவணை

| I<br>தேர்தற் றொகுதிகள் | II<br>உதவிப் பதிவு உத்தியோகத்தர் |
|---|---|
| இல. 1—கொழும்பு வடக்கு | |
| இல. 2—கொழும்பு மத்தி | |
| இல. 3—பொரல்லை | உதவிக் காரியதரிசி, கல்வி கலாச்சார அலுவல் அமைச்சு |
| இல. 4—கொழும்பு தெற்கு | |
| இல. 19—தெகிவலை-கல்கிசை | |

---

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### 4 (1) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை

#### கட்டளை இலக்கம் 150

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4(1) ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மொஹொட்டலாகே டிங்கிரி பண்டா, உணவு, வர்த்தக வியாபார அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் எக்கால் நடையையோ எவ்வொருவரோ உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியால் வழங்கப்பட்ட உத்தரவின் பேரிலும், அவ்வுத்தரவுக்கிணங்கியும் அல்லாது இலங்கைக்குள் இறக்குமதி செய்யக்கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

கொழும்பு,
1960 ம் ஞூ மே 23 ந் உ.

எம். டீ. பண்டா,
உணவு, வர்த்தக வியாபார அமைச்சர்.

---


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.